**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.79/2016 . நாள்.23.09.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அன்பு | **வயது** | 38 |
| **த/பெ. க/பெ.** | சின்னசாமி | **மதம்** | |
| **முகவரி** | ஜிங்கல்கதிரம்பட்டி | **தொழில்** | விவசாயம் |

**வா.சா.1 ஆஜர். முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 07.07.2003 தேதிய ஆவண எண்.722/2003 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 07.07.2003 தேதிய ஆவண எண்.723/2003 2-ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 07.07.2003 தேதிய ஆவண எண்.724/2003 3-ம் வாதி பெயரிலான தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவ நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 12.11.2010 தேதிய பட்டா எண் 162-க்கான கணினி பட்டா வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 23.03.2016 தேதிய பட்டா எண் 162-க்கான கணினி பட்டா இணையத்தள நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 02.12.2014 தேதிய அழைப்பாணை 3 எண்ணம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 15.10.2015 தேதிய கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியரின் செயல்முறைகள் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 23.07.2010 தேதிய ஆவண எண்.2889/2010 கிரைய பத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 30.12.2020 தேதிய சின்னபையன் என்ற சின்னசாமியின் இறப்பு சான்றிதழ் இணையநகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 28.07.2021 தேதிய சின்னபையன் என்ற சின்னசாமியின் வாரிசு சான்றிதழ் இணையநகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 17.10.2016 தேதிய ஆவண எண்.2927/2016 கிரையபத்திரத்தின் சார்பதிவக நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

1–ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.